வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 11.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

- அனைவரின் முயற்சிகளால் மட்டுமே இந்தியா வேகமாக முன்னேற முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மகாகவி பாரதியாரின் 143ஆவது பிறந்தநாளையொட்டி, அவரது படைப்புகள் அடங்கிய தொகுப்பு புத்தகத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வெளியிட்டார்.
- புதுச்சேரி அரசு சார்பில் மகாகவி பாரதியாரின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டது.
- புதுச்சேரியில், மானியங்களை விட்டுக் கொடுத்து கவுரவ பச்சை ரேஷன்கார்டு பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என்று அரசு அறிவித்துள்ளது.

------------------------------------

***<u>பிரதமர் – ஹேக்கத்தான் 1 (18)</u>***

நாடு முழுவதும் 7ஆவது ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் இறுதிப் போட்டி, 51 மையங்களில் இன்று காலை தொடங்கிஉள்ளது. நாடு முழுவதும் இந்த போட்டியில் ஆயிரத்து 300 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்கள், செயற்கை நுண்ணறிவு, இணையவழி சாட்பாட், ஸ்டார்ட் தொடர்பு, விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி உள்ளிட்ட துறைகளுக்கான மென்பொருட்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதில் பங்கேற்றுள்ள இளம் கண்டுபிடிப்பாளர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி, காணொலி வாயிலாக இன்று மாலை கலந்துரையாடினார். அப்போது பேசிய அவர், 21ஆம் நூற்றாண்டின்

இந்தியா பற்றிய வித்தியாசமான பார்வை இளம் கண்டுபிடிப்பாளர்களிடம் இருப்பதாக பாராட்டினார். அனைவரின் முயற்சிகளால் மட்டுமே இன்றைய இந்தியா வேகமாக முன்னேற முடியும் என்று குறிப்பிட்ட அவர், இளம் கண்டுபிடிப்பாளர்களுடன் கலந்துரையாடும் இதுபோன்ற நிகழ்வுகளின் போது, நிறைய கற்றுக்கொள்ளவும், புரிந்து கொள்ளவும் வாய்ப்பு கிடைப்பதாக பிரதமர் தெரிவித்தார். முன்னதாக, 7ஆவது ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் நிகழ்ச்சியை மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று காலை காணொலி வாயிலாக தொடக்கி வைத்தார். அன்றாட வாழ்க்கையில் மக்கள் எதிர்கொள்ளும்

__*பிரதமர் – ஹேக்கத்தான்* 2 (4)__

பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் இப்போட்டி நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் சென்னை, கோவை, காஞ்சிபுரம், நாமக்கல் பகுதிகளில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் இப்போட்டி நடத்தப்படுகிறது. இந்த போட்டி மொத்தம் 36 மணி நேரம் நடைபெறுகிறது.

-----------------------------------

__*மோடி-பாரதியார் 1 (16)*__

தமிழ் கவிஞரும், சுதந்திர போராட்ட வீரருமான மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் முழு படைப்புகளின் தொகுப்பை, பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று புதுடெல்லியில் வெளியிட்டார். அப்போது உரையாற்றிய அவர், சுப்ரமணிய பாரதியாரின் பிறந்த நாளை நாடு கொண்டாடி வரும் நிலையில், அவருக்கு மரியாதையுடன் தலை வணங்குவதாக தெரிவித்தார். மகாகவி சுப்ரமணிய பாரதியின் படைப்புகளின் தொகுப்பை வெளியிடுவதில் பெருமை அடைவதாக தெரிவித்த பிரதமர், அவரின் இந்தியா குறித்த தொலைநோக்குப் பார்வை மற்றும் ஒவ்வொரு தனி மனிதருக்குமான அதிகாரம் குறித்த அவரது

சிந்தனைகள், எக்காலத்திலும் தலைமுறைகளுக்கு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக கூறினார்.

நாட்டின் கலாச்சாரம் மற்றும் இலக்கியம், இந்திய சுதந்திர போராட்டம் குறித்த நினைவுகளுடன், தமிழ்நாட்டின் பெருமைக்கும் இந்தநாள் குறிப்பிடத்தக்க நாளாகும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் படைப்புகளை வெளியிடுவது ஒரு சிறந்த சேவை மட்டுமல்லாது உன்னதமான முயற்சி என்றும் பிரதமர் கூறினார்.

*__மோடி-பாரதியார் 2 (5)__*

முன்னதாக, மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் 143ஆவது பிறந்த நாளையொட்டி, பிரதமர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், தொலைநோக்குப் பார்வை கொண்ட கவிஞர், எழுத்தாளர் மற்றும் சிந்தனையாளராக திகழ்ந்த பாரதியார், தனது எழுத்துக்களால் சுதந்திர வேட்கையை மக்களிடையே ஏற்படுத்தியவர் என்று புகழாரம் சூட்டினார்.

------------------------------------

*__பாரதியார் பிறந்தநாள்__* __(13)__

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் 143ஆவது பிறந்தநாள் இன்று புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, பாரதி பூங்காவில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அவர்களுடன் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், வேளாண் துறை அமைச்சர் திரு. ஜெயகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ரமேஷ் என்கிற கேஎஸ்பி, திரு. லட்சுமிகாந்தன் ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து, ஈஸ்வரன் கோவில் வீதியில் அமைந்துள்ள மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் நினைவு

அருங்காட்சியத்தில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில் அமைச்சகர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

------------------------------------

*அஷ்வினி வைஷ்ணவ் (14)*

நாடு முழுவதும் மிகப் பெரிய அளவிலான ரயில் நிலைய மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய ரயில்வே அமைசசர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். மக்களவையில் இன்று, துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்து பேசிய அவர், இதன்மூலம் ஆயிரத்து 324 ரயில் நிலையங்கள் பயனடையும் என்றார். முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுடன் ஒப்பிடுகையில், தற்போது, ரயில்வே துறைக்கு 9 மடங்கு கூடுதல் நிதியை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஒதுக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில், மேம்பாலங்கள், ரயில்வே இணைப்பு சாலைகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு நடவடிக்கைகள், உயர் முன்னுரிமை அடிப்படையில் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார். நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில், அடுத்த 50 ஆண்டுகளில் ஏற்படும் போக்குவரத்து தேவையை கருத்தில் கொண்டு, புதிய திட்டங்கள் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

------------------------------------

குடும்ப அட்டை (16)

புதுச்சேரியில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்கு உதவும் வகையில், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை மூலம் வழங்கப்படும் மானியங்களை விட்டுக் கொடுத்து, கௌரவ பச்சை நிற அட்டை பெற விருப்பமுள்ளவர்கள், அதற்காக விண்ணப்பிக்கலாம் என்று அத்துறையின் இயக்குநர் திரு. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர்

வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கவுரவ பச்சை நிற அட்டைப் பெற விரும்புவோர், 9944052612 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுப்பதன் மூலம் இச்சேவையை பெறலாம் என்று தெரிவித்துள்ளார். மேலும், ரேஷன் கார்டில் உள்ள உறுப்பினர்களின் ஆதார் எண்கள் மற்றும் மொபைல் எண்கள், ரேஷன் கார்டுடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதையும், இறந்த உறுப்பினர்களின் பெயர் நீக்கம், முகவரி திருத்தம் போன்றவற்றை உறுதி செய்து கொள்ள உரிய ஆவணங்களுடன் இத்துறையை அணுகலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஆன்-லைன் மூலமாக pdsswo.py.gov.in என்ற இணையதளம் மூலமும் இச்சேவையை பெறலாம் என்றும் திரு. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

------------------------------------

_அரசு பொது மருத்துவமனை (6)_

புதுச்சேரி அரசு பொது மருத்துவமனையில், காலையில் மட்டுமே செயல்பட்டு வந்த புற நோயாளிகள் பிரிவு, நேற்று முதல் மாலையிலும் செயல்பட தொடங்கி உள்ளது. அதன்படி, வாரத்தில் திங்கட் கிழமை முதல், வெள்ளிக் கிழமை வரை, 5 நாட்கள், மாலை 5 மணி முதல், இரவு 7.30 மணிவரை புறநோயாளிகள் பிரிவு செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்கள்

------------------------------------

_நிர்மலா சீத்தாராமன் (13)_

உலக அளவில் போரை தவிர்த்து, அமைதியை நிலைநாட்டுவதில் அரசுகளும், தொழில் துறையினரும் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, நிகழ்ச்சியில் பேசிய அவர், வரும் ஆண்டுகளில், இயல்பு நிலையை மீட்டெடுப்பதே உலகளாவிய முன்னுரிமையாக இருக்க

வேண்டும் என்று கூறினார். வினியோக சங்கிலி சீர்குலைவதற்கு, உலகளாவிய போர்கள் முக்கிய காரணங்களாக இருப்பதால், அவை தவிர்க்கப்பட வேண்டும் என்றார். பணவீக்கம் உலக அளவில் பெரும் சவாலாக உள்ளது என்று தெரிவித்த நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், தொழில் துறையினருடன் அரசுகளும், கொள்கை வகுப்பாளர்களும், பொது மக்களும் ஒன்றிணைந்து இயல்பு நிலையை உருவாக்க முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

-----------------------------------

*__வானிலை__* __1 (15)__

இலங்கை கடலோரப் பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில்நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில் வடமேற்கு திசையில் இலங்கை-தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்காரணமாக, அடுத்த 2 நாட்களுக்கு கடலோர தமிழகத்தின் பெரும்பாலான இடங்களிலும், உள்தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்காலிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடலூர், மயிலாடுதுரை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களின் ஒருசில பகுதிகளிலும், காரைக்காலிலும், கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், புதுச்சேரி, மற்றும் விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை 2 (6)

**மீனவர்களுக்கான வானிலை எச்சரிக்கை, அடுத்து வரும் 2 நாட்களுக்கு தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் மணிக்கு 35 முதல், 45 கிலோ மீட்டர் வேகத்திலும், இடைஇடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

**-------------------------------------**